திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் நாள், வெள்ளி கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள். 1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் மேலரண் சாலையிலுள்ள ரெத்தினவேல் தேவர்மன்ற வணிக வளாகத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கலையரங்கத்தில் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.215 நாள்.29.11.12ன் படி பட்டியலில் கண்டுள்ள வாடகை தொகை தற்போது வசூல் செய்யப்பட்டு வருகிறது.

வ. எண்.	விபரம்	நிகழ்ச்சி விபரம்	வாடகை விபரம் ரூ.	சேவை வரித் தொகை 18 % ரூ.	மின் கட்டண முன் வைப்புத் தொகை ரூ.	மொத்தம் ரூ. (4+5+6)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	தேவர்மன்ற கலையரங்கம்	**ஒரு நாள் நிகழ்ச்சி** (காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை)	15000	2700	25000	**42700**
		ஆறு மணி நேர நிகழ்ச்சி (காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை) **அல்லது** (மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை)	10000	1800	15000	**26800**
2	வாகன நிறுத்துமிட பகுதியில் உள்ள காலியிடம் (கைத்தறி கண்காட்சி / இதர நிகழ்ச்சிகளுக்கு)	ஒரு நாள் நிகழ்ச்சி / ஆறு மணி நேர நிகழ்ச்சி	3000	540	5000	**8540**

இந்நிலையில் இளநிலை பொறியாளரின் 20.12.2018ஆம் தேதிய குறிப்பின் படி ரெத்தினவேல் தேவர்மன்ற வணிக வளாக கலையரங்கத்தில் சமையல் அறை மற்றும் உணவருந்தும் இடம் மற்றும் சிறு கூட்ட அரங்கமாகவும் கட்டப்பட்டு பயன்படுத்தும் வண்ணம் உள்ளதாக தெரிவித்தும் அதற்கான ஒரு நாள் வாடகை ரூ.12,454/– என நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே, இளநிலை பொறியாளரின் குறிப்பின் படி ஏற்கனவே பட்டியலில் கண்டுள்ள விபரப்படி நிகழ்ச்சி நடத்த கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில், சமையல் அறை மற்றும் உணவருந்தும் இடம் மற்றும் சிறு கூட்ட அரங்கமாகவும் பயன்படுத்திக்கொள்ள நிகழ்ச்சி பதிவு செய்பவர்களால் தேவைப்படும் என தெரிவிக்கும் பட்சத்தில் தனியாக ஒரு நாள் வாடகை தொகை ரூ12,500/– என நிர்ணயம் செய்வதற்கும், மற்றும் மின் கட்டணம் வைப்புத் தொகை ரூ.5000/– என நிர்ணயம் செய்வதற்கும், கூடுதலாக நடைமுறையில் உள்ள சேவை வரித் தொகையும் சேர்த்து வசூல் செய்வதற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மேற்படி பட்டியலில் கண்டுள்ள விபரப்படி நிகழ்ச்சி நடத்த கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது சமையல் அறை மற்றும் உணவருந்தும் இடம் மற்றும் சிறு கூட்ட அரங்கமாகவும் கட்டப்பட்டு பயன்படுத்தும் வண்ணம் உள்ளதால் நிகழ்ச்சி பதிவு செய்பவர்களால் மேற்படி சமையல் அறை மற்றும் உணவருந்தும் இடம் மற்றும் சிறு கூட்ட அரங்கம் தேவைப்படும் என தெரிவிக்கும் பட்சத்தில் தனியாக பதிவு செய்யப்பட்டு அதற்கு ஒரு நாள் வாடகை தொகை ரூ12,500/– என நிர்ணயம் செய்தும், மற்றும் மின் கட்டணம் வைப்புத் தொகை ரூ.5,000/– என 01.01.2019 முதல் முன் தேதியிட்டு நிர்ணயம் செய்தும், கூடுதலாக நடைமுறையில் உள்ள சேவை வரித் தொகையும் சேர்த்து வசூல் செய்வதற்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.அ1/0201/2019(ஸ்ரீ).

தீர்மானம் எண்.517 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வாளாகம் தரைதளத்தில் உள்ள கடை எண்கள்.20, 21, 24, 25, 26, 27, 28, 29, மற்றும் 30 = 09 கடைகளுக்கும் தனி அலுவலரின் தீர்மானம் எண்.197, நாள்.12.07.2018ன் படி சதுர அடி ரூ.44/– என் நிர்ணயம் செய்து மாத வாடகைக்கு 13.09.2019 அன்று 13வது முறையாக மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் பட்டியலில் கண்டுள்ள 4 கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகளின் தொகைகள் விபரம் பின் வருமாறு,

வ. எண்.	கடை எண்	கடையின் அளவு	ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்	உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம்	ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ.	சதுர அடிக்கு ரூ.44/– என மாநகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை ரூ.	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1	20	92.21	–	–	1.திரு.ஆ.இரவிச் சந்திரன், த/பெ.ஆறுமுகம், No.141, TSN அவன்யூ, ஆல்பா பள்ளி (எதிர்), ஏர்போர்ட் (அஞ்சல்) திருச்சி. 2. திரு.S.செந்தில் குமார், த/பெ.சீனிவாசன், No.115, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை திருச்சி.1	**8,300/–** **8,100/–**	**4,057/–**	கடை எண்.20க்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது ரூ.8,300/– ஆகும். மேற்படி கடைக்கு கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 13 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட ரூ.4,243/– கூடுதலாக உள்ளதால் ஏற்கலாம்.

2	21	92.21	–	–	1.திரு.ஆ.இரவிச் சந்திரன், த/பெ.ஆறுமுகம், No.141, TSN அவன்யூ, ஆல்பா பள்ளி (எதிர்), ஏர்போர்ட் (அஞ்சல்) திருச்சி. 2. திரு.S.செந்தில் குமார், த/பெ.சீனிவாசன், No.115, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை திருச்சி.1	**9,350/–** **9,100/–**	**4,057/–**	கடை எண்.21க்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது ரூ.9,350/– ஆகும். மேற்படி கடைக்கு கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 13 முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட ரூ.5,293/– கூடுதலாக உள்ளதால் ஏற்கலாம்.
3	24	91.21	–	–	1.திரு. திரு.M.சுரேஷ், த/பெ.மாடசாமி, No.12, அகிலா நகர், 5வது கிராஸ் கணபதி நகர், திருச்சி..5 2. திரு.ஆ.இரவிச் சந்திரன், த/பெ.ஆறுமுகம், No.141, TSN அவன்யூ, ஆல்பா பள்ளி (எதிர்), ஏர்போர்ட் (அஞ்சல்) திருச்சி. 3. திரு.ஆர்.குமார், த/பெ.இராதா கிருஷ்ணன், 4ஏ, விருப்பாச்சி புரம், கம்மாளத் தெரு, பாளையம் பஜார், உறையூர், திருச்சி.3 4. திரு.கே.நவீன் குமார். த/பெ. குமார், 4ஏ, விருப்பாச்சி புரம், கம்மாளத் தெரு, பாளையம் பஜார், உறையூர், திருச்சி.3 5.திரு.S.திருவேங்கடம், த/பெ.சீனிவாசன், No.115, கீழ படையாச்சிதெரு, பாலக்கரை, திருச்சி.1.	**12,500/–** **10,500/–** **8,100/–** **7,900/–** **7,100/–**	**4,013/–**	கடை எண்.24க்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஐந்து ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகையானது ரூ.12,500/– ஆகும். மேற்படி கடைக்கு கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 13 முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட ரூ.8,487/– கூடுதலாக உள்ளதால் ஏற்கலாம்..

4	25	93.34	–	–	1. திரு.ஆ.இரவிச் சந்திரன், த/பெ.ஆறுமுகம், No.141, TSN அவன்யூ, ஆல்பா பள்ளி (எதிர்), ஏர்போர்ட் (அஞ்சல்) திருச்சி. 2. திரு.ஆர்.குமார், த/பெ.இராதா கிருஷ்ணன், 4ஏ, விருப்பாச்சி புரம், கம்மாளத் தெரு, பாளையம் பஜார், உறையூர், திருச்சி.3 3. திரு.கே.நவீன் குமார். த/பெ. குமார், 4ஏ, விருப்பாச்சி புரம், கம்மாளத் தெரு, பாளையம் பஜார், உறையூர், திருச்சி.3 4.திரு.S.திருவேங்கடம், த/பெ.சீனிவாசன், No.115, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி.1	**8,500/–** **8,100/–** **7,900/–** **6,500/–**	**4,107/–**	கடை எண்.25க்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. நான்கு ஒப்பந்தப் புள்ளிகள் வரப் பெற்றுள்ளது. உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகையானது ரூ.8,500/– ஆகும். மேற்படி கடைக்கு கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 13 முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேலும், உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையானது மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட ரூ.4,393/– கூடுதலாக உள்ளதால் ஏற்கலாம்..

மேற்கண்ட பட்டியலில் காணும் சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வாளாகம் தரைதளத்தில் உள்ள 4 கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகைகளை ஏற்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் ஒப்புதல் அளித்துள்ளார். இதன் பேரில் கலம் 9ல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அ) மேற்கண்ட பட்டியலில் காணும் சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வாளாகம் தரைதளத்தில் உள்ள 4 கடைகளுக்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை மாநகராட்சி நிர்வாகம் பொது பணித்துறை வாடகை கணக்கீட்டின் படி ஒரு சதுர அடிக்கு மாத வாடகை ரூ.44/– என்ற விகிதத்தில் கலம் எண்.8ல் தெரிவிக்கப்பட்டுளள தொகையை விட கூடுதலாக உள்ளதாலும், மேலும் மேற்படி கடைகளுக்கு கடந்த 2014 முதல் 13 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளதாததாலும், ஒவ்வொரு முறையும் ஏல அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணமும் அதிக அளவில் செலவிடப்பட்டுள்ளதாலும், இதற்கு மேல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் மேற்படி உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை என்பதால் வருவாய் இழப்பினை தவிர்க்கும் வகையில் வரப்பெற்ற உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்க்கலாம்.

ஆ) அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள்.03.07.2007ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யலாம்.

இ) தனி அலுவலரின் தீர்மானம் எண்.197 நாள்.12.07.2018ன் படி இனம் குத்தகை உறுதி செய்த 3 நாட்களுக்குள் குத்தகை உரிம முன்பணமாக 24 மாத குத்தகை உரிமத் தொகையினை முன் பணமாக மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்ட பின்னர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்து ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி கடைக்கான குத்தகை உரிமம் வழங்கி கடையினை ஒப்படைப்பு செய்யலாம்.

கோப்பு எண்.அ1/8784/2013/ஸ்ரீ

தீர்மானம் எண்.518 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.17, தேவர்ஹால் வணிக வளாகம் முதல் தள கடை எண்.06 கேட்பு எண்.2002564 திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்போது மாத வாடகை தொகையாக ரூ.12895/– செலுத்தி வருகிறார். மனுதாரரின் 03.10.2018ஆம் தேதிய விண்ணப்பத்தில் தான் வெளிநாடு செல்ல இருப்பதால் தன்னால் தொடர்ந்து தொழில் நடத்த இயலாத காரணத்தினால் கடையை மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளதனை தொடர்ந்து இளநிலை பொறியாளரின் 03.10.2018ஆம் தேதிய குறிப்பின் படி கடை தற்போது நல்லமுறையில் இருப்பதாகவும் மின் இணைப்பு நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளதால் கட்டிடக் கடை கேட்பு எண்.2002564ஐ 01.10.2018 முதல் முன் தேதியிட்டு கேட்பு பதிவேடு மற்றும் கணினியில் இருந்து நீக்கம் செய்வதற்கும், மேற்படி கடைக்கு மறு ஏலம் கோருவதற்கும், ஏல விபர அறிக்கையினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டி தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட நிலவாடகை உரிமத்தினை (நிலவாடகை இனம் கேட்பு எண்.2002564) ஐ 01.10.2018 முதல் முன் தேதியிட்டு ரத்து செய்ய அனுமதிக்கலாம்.
2. மேற்படி கடைக்கு மறு ஏலம் கோருவதற்கும், ஏல விபர அறிக்கையினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு.எண். அ1/6228/2018ஸ்ரீ)

தீர்மானம் எண்.519 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.17க்குட்பட்ட தேவர் மன்றத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ஸ்வச் சர்வேக்ஷான் 2020 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி தொடர்பான கூட்டம் 19.07.2019 அன்று நடத்துவதற்கு தேவையான மேடை அலங்காரம், தரை விரிப்பான், விளம்பர பலகை, டேபிள் சேர், LEd புராஜெக்டர் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றை வாடைக அடிப்படையில் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.80,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.06 சதவீதம் குறைவான விலைவீதத்தில், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் திரு.M.பொன்னுசாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/7971/2019(மையம்)

தீர்மானம் எண்.520 (பொருள்–4) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் உத்திரவுப்படி எ.எம்.கே என்ற மனித ஆற்றல் சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. பார்வை 2ல் காணும் இவ்வலுவலக உத்திரவின்படி மேற்கண்ட நிறுவனத்திற்கு 207 பணியாளர்கள் அமர்த்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் அந்நிறுவனம் ஆட்கள் சரிவர சப்ளை செய்ய முடியாத காரணத்தினாலும் பணி திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தத்தை 11.07.2019 முதல் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு மூலம் பரிந்துரை செய்து ரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் இம்மாநகராட்சியில் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு

உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை பெறுவதற்கு 01.08.2019 முதல் சுய உதவி குழுக்கள் மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் பொதுமக்களிடமிருந்து நேரடியாக குப்பைகளை சேகரித்து மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக தயார் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வார்டு எண்.40,49,50,52,54,57 மற்றும் 60ல் நுண்ணுயிர் உரக்கிடங்கில் உரம் தயார் செய்யப்பட்டது. தற்சமய இப்பணியினை கீழ்கண்ட 15 சுய உதவி குழுவின் மூலம் 209 துப்புரவு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும். எனவே, கீழ்கண்ட 15 குழுக்களில் உள்ள 209 பணியாளர்களுக்கு 2019–2020ம் நிதியாண்டில் (01.08.2019 முதல் 31.03.2010 வரை) தொடர்ந்து பணியமர்த்த ஆகும் உத்தேச செலவினம் 209 X 360 75240 x 244 நாட்களுக்கு = ரு.1,83,58,560/– ஆகிறது. எனவே , கீழ்கண்ட குழுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி மன்ற பொருள்.

வ. எண்	வார்டு எண்	சுயஉதவிக் குழுக்களின் பெயர்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	ஊதியம் வழங்க வேண்டிய காலம்	உத்தேச செலவினத் தொகை						
1	40	ராக்போர்ட்	15	01.08.19 – 31.03.2019	15	x	360	x	5400	x 244	1317600
2	40	துளசி	17	01.08.19 – 31.03.2019	17	x	360	x	6120	x 244	1493280
3	41	ஜெய்ஹிந்த்	15	01.08.19 – 31.03.2019	15	x	360	x	5400	x 244	1317600
4	49	சூரியன்	12	01.08.19 – 31.03.2019	12	x	360	x	4320	x 244	1054080
5	50	சந்திரன்	13	01.08.19 – 31.03.2019	13	x	360	x	4680	x 244	1141920
6	52	ஐயப்பன்	20	01.08.19 – 31.03.2019	20	x	360	x	7200	x 244	1756800
7	53	திருமலை	13	01.08.19 – 31.03.2019	13	x	360	x	4680	x 244	1141920
8	51	பாலக்காடு	12	01.08.19 – 31.03.2019	12	x	360	x	4320	x 244	1054080
9	54	குழுமாயி	11	01.08.19 – 31.03.2019	11	x	360	x	3960	x 244	9662400
10	55	தில்லை	14	01.08.19 – 31.03.2019	14	x	360	x	5040	x 244	1229760
11	56	திருச்சி	15	01.08.19 – 31.03.2019	15	x	360	x	5400	x 244	1317600
12	57	பெஸ்ட்	15	01.08.19 – 31.03.2019	15	x	360	x	5400	x 244	1317600
13	58	சீமி	12	01.08.19 – 31.03.2019	12	x	360	x	4320	x 244	1054080
14	59	தொடரும்	12	01.08.19 – 31.03.2019	12	x	360	x	4320	x 244	1054080
15	60	தூய்மை	13	01.08.19 – 31.03.2019	13	x	360	x	4680	x 244	1141920
கூடுதல்			**209**		**209**	**x**	**5400**	**x**	**75240**	x 244	**18358560**

அலுவலக குறிப்பு :

இக்குழுவில் உள்ள துப்புரவு பணியாளர்கள் 209 நபர்களை தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக் கொள்ளவும், 01.08.2019 முதல் 31.03.2020 வரை இப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்திற்கான உத்தேச செலவினம் ரூ.1,83,58,560/– வழங்க அனுமதி அளிக்கலாம். மேலும் பணியாளர்களுக்கு EPF பங்கு தொகை வழங்க அனுமதி அளிக்கலாம்.

கோப்பு எண்.சி4/12661/2019 (கோ.அபி)

தீர்மானம் எண்.521 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்.44க்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.153/ 2019–2020ன் வாயிலாக 31.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ எண்	**வேலையின் விபரம்**	**வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம்**	**குறிப்பு**
1	2	3	4
1	வார்டு எண். 44க்குட்பட்ட மாநகராட்சி மைய அலுவலக கட்டிடத்தின் முற்றத்தில்(Court yard) உள்ள பூங்காவிற்கு நீரூற்று, நடைபாதை, வண்ணப்பூச்செடிகள், Pergola போன்றவை அமைத்து பூங்காவை மேம்படுத்தும் பணி மதிப்பீடு ரூ.34.00 இலட்சம்.	1. **மெர்சஸ். ஹஸ்டிகிரி டெவலபர்ஸ் (பி) .லிமிடெட் ,** 0.06 % குறைவு 2. **திரு.** சி.கணேசன் 05.93 % கூடுதல்	வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெர்சஸ். ஹஸ்டிகிரி டெவலபர்ஸ் (பி) லிமிடெட்,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு.

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப் படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

(இ2/2251/2019(மையம்)

தீர்மானம் எண்.522 (பொருள்–6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட 7,14,15,19,20,21,22,23, 24,25,26,27,28,29,33 மற்றும் 61,62,64 ஆகிய வார்டு பகுதிகளில் நுண் உர செயலாக்க மையத்தில் பணி மேற்கொண்ட துப்புரவு பணியாளர்களை பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக துப்புரவுப் பணியாளர்கள் நிலைகளில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மற்றும் மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்க ஏதுவாக துப்புரவுப் பணியாளர் நிலையில் அளவுகோலின் அடிப்படையில் நுண் உர செயலாக்க பணியினை 7,14,15,19,20,21,22,23,24,25,26,27,28,29,33 மற்றும் 61,62,64 ஆகிய வார்டு பகுதிகளில் ஆகிய பகுதிகளில் 31.07.2019 வரை ஒப்பந்த அடிப்படையில் மனித ஆற்றல்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்கண்ட வார்டு பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு புதியதாக 182 பணியாளர்களை சுய உதவிக்குழு மூலம் நியமனம் செய்வதற்கும், மேலும் நுண் உர செயலாக்க மையத்தின் பணியின் அவசர அவசியம் கருதி 01.08.2019 முதல் 31.03.2020 ஆகிய ஆண்டிற்கு சுய உதவிக்குழு மூலம் பணியாளர்கள் 182 பணியாளர்கள் ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ஊதியமாக வழங்கவும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. 01.08.2019 முதல் 31.03.2020 ஆகிய 8 மாதத்திற்கு உத்தேச செலவினம் 182X244X360/-

ரூ.15,98,6880 /– நிர்வாக பங்கு தொகை ரூ.20,78,295/–க்கு ஒப்புதல் வழங்கலாம்.

2. 2019-2020ம் ஆண்டிற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்படும் 14வது மானியக்குழு மானியத் தொகை / மாநகராட்சி பொது நிதி வருவாய் நிதி கணக்குத் தலைப்பு எண். 2105/1-ன் கீழ் ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண்.523 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.
பொருள். 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்டம் பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை பேவர் உதவியுடன் தார் சாலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்ட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி மெசர்ஸ். S.S. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

மெசர்ஸ். S.S. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.50902/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	செலுத்திய இடம்	பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம்	தொகை (ரூபாயில்)	காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண்
1	2	3	4	5	6	7
1	வார்டு எண.01க்குட்பட்ட மேலசித்திரை வீதிகளில் உள்ள பழுதடைந்துள்ள தார் சாலைகளை பேவர் பினிஷர் கொண்டு தார் சாலை அமைக்கும் பணி இ7/5419/2014 (மையம்)	மெசர்ஸ். S.S. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்	முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை	04.09.14 காப்புத் தொகை	29506.00	பகுதி -VII பக்கம் எண்- 22 வ.எண் -289 (மையஅலுவலகம்)
2	வார்டு எண்.04க்குட்பட்ட பர்மா காலனி பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை பேவர் பினிஷர் கொண்டு தார் சாலை அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.8.30 இல.ட்சம் இ7/ 6032/2014 (மையம்)	மெசர்ஸ். S.S. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்	முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை	20.01.15 காப்புத் தொகை	21396.00	பகுதி -VII பக்கம் எண்- 44 வ.எண் -605 (மையஅலுவலகம்)
மொத்தம்					**50902.00**	

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை” எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததார் மெசர்ஸ். S.S. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.50,902 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ7/1458/2019 (மையம்)

தீர்மானம் எண்.524 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பருவ மழை காலங்களில் பொழியும் மழைநீரினை பொது மக்கள் தங்களது வீடுதோறும் சேமித்து வைக்க முன்னேற்பாடுகளாக "**மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு செய்தல்**" குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை மாநகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக தமிழக அரசு மற்றும் சென்னை மெட்ரோ குடிநீர் வழங்கல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட A4 அளவிலான 3 வகையான துண்டு பிரசுரங்கள் 100000 எண்ணிக்கை வீதம் மொத்தம் 300000 எண்ணிக்கை துண்டு பிரசுரங்கள் அச்சடித்து பொது மக்களுக்கு விநியோகம் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளியாக M/s. தஞ்சை பிரஸ் திருச்சி நிறுவனத்தினர் (ஒரு துண்டு பிரசுரத்திற்கு ரூ.1.56 காசுகள்+ GST 12%) 3,00,000 துண்டு பிரசுரத்திற்கு ரூ.4,68,000/– மற்றும் GST ரூ.56,160/– ஆக மொத்தம் ரூ.5,24,160/–க்கு அச்சடித்து வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

எனவே, அவசர அவசியம் கருதியும், அரசு நிர்ணயித்த காலக்கெடுவிற்குள் பணிகளை முடிக்கும் பொருட்டும் மேற்கண்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் பணியினை குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.தஞ்சை பிரஸ் நிறுவனத்தாரிடம் மேற்கொள்ளப்பட்டதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.524160/–ஐ மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(சி5/8969/2019(மையம்)

தீர்மானம் எண்.525 (பொருள்–9) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்:44. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில் **09.09.2019**. அன்று நடைபெற உள்ள மழைநீர் சேகரிப்பு, நீர்நிலைகள் புனரமைப்பு மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த மண்டல அளவிலான ஆய்வு கூட்டத்திற்கு தேவையான மண்டபம்,நாற்காலி ,மேசை, ஒலிபெருக்கி , விளக்குகள், விளம்பர பலகைகள்,சென்ரேட்டர், விருந்தினர் தங்கும் அறை மழைநீர் சேகரிப்பு மாதிரிகள் விருந்தினர்களுக்கு உணவுகள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்க்கு ரூ.18.95 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டின் விலையை விட 0.08 சதவீதம் குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.கோபால கிருஷ்ணன் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ8/10160/19 (மையம்)

தீர்மானம் எண்.526 (பொருள்–10) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்:44 கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில் 13.09.2019 அன்று நடைபெற உள்ள ஸ்வச் சர்வேக்ஸன் 2020 (SS 2020) பயிற்சி பட்டறைக்கு தேவையான மண்டபம்,நாற்காலி ,மேசை, ஒலிபெருக்கி , விளக்குகள், விளம்பர பலகைகள்,சென்ரேட்டர், விருந்தினர் தங்கும் அறை மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்க்கு ரூ.9.61 இலட்சத்திற்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டின் விலையை விட 0.13 சதவீதம் குறைவான விலைவிகிதத்தில் விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ8/10161/19(மையம்)

தீர்மானம் எண்.527 (பொருள்–11) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தலைமை நீர்பணி நிலையத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு. AG.இளமயிலன் திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. AG.இளமயிலன் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.38200/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	செலுத்திய இடம்	பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம்	தொகை (ரூபாயில்)	காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண்
1	2	3	4	5	6	7
1	கம்பரசம்பேட்டை தலைமை நீரேற்ற நிலைய வளாக காவேரி ஆற்று கரை மற்றும் காவேரி ஆற்று படுகையில் 250மி.மீ விட்டமுள்ள ஆழ்துளை கிணறு எண்.3 மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் இ4 /2033/ 2014(மையம்)	திரு. AG.இளமயிலன்	முதல் மற்றும் பகுதி பட்டியல் தொகை	05.09.14 காப்புத் தொகை	2528.00	பகுதி -VII பக்கம் எண்- 62 வ.எண் -853 (மைய அலுவலகம்)
			2ம் மற்றும் இறுதி பட்டியல் தொகை	17.08.16 காப்புத் தொகை	35672.00	
மொத்தம்					**38200.00**	

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை” எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திரு. AG.இளமயிலன் ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.38,200 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ7/6147/2018(மையம்)

தீர்மானம் எண்.528 (பொருள்–12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை திரு.எஸ்.மாமுண்டி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள்	பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்		
1	2	3	4	5		
				தொகுப்பு	**ப. எண்**	**வ . எண்**
1	வார்டு எண் **26** காஜாபேட்டை பகுதியில் உள்ள வாக்குச் சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணி **மதிப்பீடு ரூ.1.78 லட்சம்** இ3/ 3631 / 16	19.07.16 (SD) 4%	7070.00	-	-	-
		19.07.16 (EMD) 2%	3560.00	-	-	-
2	வார்டு எண் 24க்குட்பட்ட எடத் தெரு மற்றும் பென்சனர் தெருக்களில் நடைபாதையுடன் கூடிய வடிகால் கட்டும் **மதிப்பீடு ரூ.9.95 லட்சம்** இ3/ 190 / 15	27.05.15 (SD) 4%	39345.00	VIII	14	4
3	வார்டு எண் 22க்குட்பட்ட பருப்புக் காரத்தெரு அண்ணா சிலையிலிருந்து உய்யகெண்டான் உய்யகொண்டான் நோக்கி செல்லும் மழைநீர் வடிகால் சீர் செய்யும் பணி **மதிப்பீடு ரூ.4.50 லட்சம்** இ3/ 186 / 15	27.05.15 (SD) 4%	17647.00	VIII	14	5
4	வார்டு எண் 22க்குட்பட்ட மல்லிகைபுரம் 8,9வது குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மழைநீர் வடிகால் சீரமைத்தல் **மதிப்பீடு ரூ.5.00 லட்சம்** இ3/ 2383 / 15	21.08.15 (SD) 4%	16796.00	VIII	27	51
மொத்தம்			**84418.00**			

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**84,418**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.எஸ்.மாமுண்டி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்தியுள்ள செய்துள்ள காப்புத் தொகை ரூ.**84,418**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ3/3631/16(மை)

தீர்மானம் எண்.529 (பொருள்–13) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை திரு.ஆர்.தேவராசன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்	பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்		
1	**2**	**3**	**4**	**5**	**6**		
					தொகுப்பு	**ப. எண்**	**வ . எண்**
1	வார்டு எண்8, 9 ஓயாமாரி ரோடு, மேலதேவதானம் மற்றம் காவேரி நகர் சாலையில் தார்தளம் அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ. 40.00 லட்சம்** இ3/ 11326 /12	திரு.ஆர். தேவராசன், திருச்சி	14.03.13 (SD) 3%	91364.00	V	65	904
